## சுருக்கம்

தஞ்சாவூர் நகராட்சி பகுதியில் அமைந்துள்ள தஞ்சை பெரிய கோவிலில் 25.9.2010 மற்றும் 26.09.2010 முடிய 1000–ஆம் ஆண்டு நிறைவு விழா – பொது சுகாதாரப் பணிகள், குடிநீர் விநியோகப் பணிகள் மற்றும் அடிப்படை வசதிகள் மேற்கொள்வதற்கு எதிர்பாராத செலவினத்துக்கான தஞ்சாவூர் நகராட்சிக்கு சிறப்பு மான்யமாக ரூ.9.80 இலட்சத்தை விடுவித்து ஆணை வெளியிடப்படுகிறது.

---

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நநி.4) துறை

அரசாணை (நிலை) எண்: 214 நாள் :22.09.2010

படிக்கப்பட்டது:

1. நகராட்சி நிர்வாக இயக்குநரின் கடித எண். 38382/இ3/2010, நாள் 04.09.2010.
2. தஞ்சாவூர் மாவட்ட ஆட்சியர் கடித ந.க.எண்.76103/09/ஜ3, நாள் 20.8.2010.

---

**ஆணை:**

மேலே முதலாவதாக படிக்கப்பட்ட கடிதத்தில் நகராட்சி நிர்வாக இயக்குநர், தஞ்சை பெரிய கோவில் 1000வது ஆண்டு நிறைவு விழா எதிர்வரும் 25.9.2010 மற்றும் 26.09.2010 ஆகிய இரு தினங்கள் அரசு விமர்சையாக கொண்டாடுவது தொடர்பாக பொதுமக்களுக்கு அடிப்படை தேவைகளை பொது சுகாதாரப் பணிகள், குடிநீர் விநியோகப் பணிகள் மற்றும் அடிப்படை வசதிகள் மேற்கொள்வதற்கு எதிர்பாராத செலவினத்துக்காக சிறப்பு மான்யம் விடுவிக்க அரசுக்கு பரிந்துரை செய்து ஆணை பெற்றுத்தருமாறு கோரியுள்ளார். தஞ்சை பெரிய கோவில் 1000வது ஆண்டு நிறைவு விழா எதிர்வரும் 25.9.2010 மற்றும் 26.09.2010 ஆகிய இரு தினங்கள் அரசு விமர்சையாக கொண்டாட முடிவு செய்துள்ளது என்றும், அதன் அடிப்படையில் பொது மக்களுக்கு அடிப்படை வசதிகளான சாலைகள், கட்டமைப்பு பணிகள் மேற்கொள்ள அரசால் அரசாணை (நிலை) எண்.188, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 13.08.2010 வாயிலாக சிறப்பு மான்யமாக ரூ.25.19 கோடி அனுமதிக்கப்பட்டுள்ளது என்றும் தெரிவித்துள்ளார்.

2. மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட தஞ்சாவூர் மாவட்ட ஆட்சியர் கடிதத்தில், தஞ்சை பெரிய கோவில் 1000வது ஆண்டு நிறைவு விழாவையொட்டி அரசாணையில் அனுமதிக்கப்பட்டுள்ள தொகை ரூ.25.19 கோடியை தவிர்த்து, கீழ்க்காணும் பணிகளை செய்து முடிக்கும் பொருட்டு எதிர்பாராத செலவினமாக ரூ.50.00 இலட்சத்தை சிறப்பு மான்யமாக விடுவிக்க அரசுக்கு பரிந்துரை செய்யுமாறு கேட்டுக் கொண்டார்.

1. நகரில் தொடர்ந்து குப்பைகள் அகற்றும் பணி.
2. கழிவுநீர் ஓடைகளை தூர்வாரும் பணி. இச்சிறப்பு பணியை மேற்கொள்ள பிற நகராட்சிகளிலிருந்து வாகனத்துடன் வருபவர்களுக்கு தேவையான எரிபொருள், உணவு மற்றும் பயணப்படியல் வழங்குதல்.
3. தேவையான இடங்களில் பிற துறைகள் மூலம் மேற்கொள்ள வேண்டிய அவசியப் பணிகள்.

4. பொது சுகாதார தளவாட சாமான்கள் மற்றும் கிருமி நாசினிகள் வாங்கிப் பயன்படுத்துதல்.

5. நகரின் முக்கிய பகுதிகளில் தற்காலிக கழிப்பறைகள், சிறுநீர்க் கழிப்பிடங்கள் மற்றும் மொபைல் கழிப்பிடங்கள் அமைத்தல்.

6. தேவையான இடங்களில் குழாய் மாற்றம், மின்மாற்றிகள், மின்கம்பம் போன்ற செலவினங்கள்.

7. நகரின் பல்வேறு பகுதிகளில் குடிநீர் வழங்குவதற்கு ஏதுவாக 30க்கும் மேற்பட்ட சின்டெக்ஸ் டேங்க் வாங்குதல், குடிநீர் லாரி டிப்பர் லாரி வாடகைக்கு அமர்த்துதல், முக்கியமான 10 இடங்களில் பொது மக்கள் நிழற்குடை அமைத்தல்.

8. மற்ற எதிர்பாராத செலவுகள்.

3. விழா நாட்களுக்கு முன்பும், அதன் பின்பும் மேற்படி பணிகளை செய்து முடிக்கும்பொருட்டு எதிர்பாராத செலவினமாக ரூ.50.00 இலட்சத்தை சிறப்பு மான்யமாக விடுவிக்கவும், மேற்படி செலவுகள் அனைத்தையும் உரிய தேவை அறிக்கை (Justification report) அடிப்படையில் மாவட்ட ஆட்சியர் அனுமதி பெற்று நகராட்சி அல்லது சம்பந்தப்பட்ட துறை மூலம் செயல்படுத்தவும் மாவட்ட ஆட்சியர் கேட்டுக் கொண்டுள்ளார் என்றும், முக்கிய பிரமுகர்கள் வருகை தொடர்பான வரவேற்பு, உணவு செலவுகள், அலங்கார ஏற்பாடுகள், சுவரொட்டிகள், பேனர்கள் அமைத்தல் போன்றவற்றை மேற்படி தொகையிலிருந்து மேற்கொள்ளக் கூடாது என்ற நிபந்தனை விதிக்கலாம் என மாவட்ட ஆட்சியர் தெரிவித்துள்ளதாக நகராட்சி நிர்வாக இயக்குநர் தெரிவித்துள்ளார்.

4. தஞ்சை மாவட்ட ஆட்சியரின் கருத்துருவில் மேலே பத்தி 2-ல் குறிப்பிட்டுள்ள மேற்படி பணிகளை, மாவட்ட ஆட்சியர் குறிப்பிட்டுள்ள நிபந்தனைக்குட்பட்டு, மாவட்ட ஆட்சியரின் அனுமதி பெற்று தஞ்சை நகராட்சி மற்றும் சம்பந்தப்பட்ட துறைகள் மூலம் செயற்படுத்துவதற்காக எதிர்பாராத செலவினமாக ரூ.50.00 இலட்சத்தை தஞ்சாவூர் நகராட்சிக்கு ஒதுக்கீடு செய்து சிறப்பு மான்யமாக விடுவிப்பதற்கு நகராட்சி நிர்வாக இயக்குநர் முதலாவதாக படிக்கப்பட்ட கடிதத்தில் அரசுக்கு பரிந்துரை செய்துள்ளார்.

5. நகராட்சி நிர்வாக இயக்குநரின் பரிந்துரையினை அரசு கவனமாக ஆய்வு செய்தது. ஆய்வின் முடிவில் மேலே பத்தி 2-ல் குறிப்பிடப்பட்டுள்ள பணிகளை நிறைவேற்ற, கீழ்க்கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டு மொத்த ஒதுக்கீடாக (Lumpsum Grant) ரூபாய் 9.80 இலட்சம் (ரூபாய் ஒன்பது இலட்சத்து எண்பதாயிரம் மட்டும்) நகராட்சி நிர்வாக இயக்குநருக்கு வழங்கி அரசு ஆணையிடுகிறது. இத்தொகையினை பெற்று தஞ்சாவூர் நகராட்சி ஆணையருக்கு அளிக்கவும், நகராட்சி நிர்வாக இயக்குநருக்கு அதிகாரம் அளிக்கப்படுகிறது.

(1) உரிய தேவை அறிக்கை (Justification Report) அடிப்படையில் மாவட்ட ஆட்சியர் அனுமதி பெற்று தஞ்சாவூர் நகராட்சி பணிகளை செயல்படுத்த வேண்டும்.

(2) முக்கிய பிரமுகர்கள் வருகை தொடர்பான வரவேற்பு, உணவு செலவுகள், அலங்கார ஏற்பாடுகள், சுவரொட்டிகள், பேனர்கள் அமைத்தல் போன்றவற்றை மேற்படி தொகையிலிருந்து மேற்கொள்ளக் கூடாது.

(3) மற்ற நகராட்சிப் பணியாளர்களையும் பயன்படுத்தி மேலே பத்தி 2-ல் குறிப்பிடப்பட்டுள்ள பணிகளை மேற்கொள்ள வேண்டும். செலவினம் அனுமதிக்கப்பட்டுள்ள தொகைக்குள்ளாக இருக்க வேண்டும். கூடுதல் செலவினம் ஏற்பட்டால் அதை தஞ்சாவூர் நகராட்சியே ஏற்க வேண்டும்.

6. மேலே பத்தி 5-ல் குறிப்பிடப்பட்டுள்ள தொகையினை கீழ்க்கண்ட கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்.

"2217. நகர்ப்பகுதி வளர்ச்சி – 05. ஏனைய நகர்ப்பகுதி வளர்ச்சித் திட்டங்கள்– 192 நகராட்சிகள், நகராட்சி மன்றங்கள் முதலியவற்றிற்கு நிதி உதவி-பதினொன்றாம் ஐந்தாண்டு திட்டப் பணிகள் –II. மாநிலத் திட்டம் JL. தஞ்சை பெரிய கோவில் 1000–வது ஆண்டு விழா அடிப்படை வசதிகளை மேம்படுத்துதல்–09– உதவித்தொகை–09 ஏனையவை. (க.தொ.கு 2217–05–192–JL–0997)

7. தேவையான கூடுதல் நிதியினை 2010–2011 திருத்திய மதிப்பீடு / இறுதி திருத்திய நிதியொதுக்கத்தில் ஒதுக்கீடு செய்யப்படும். நிதியொதுக்கத்தை எதிர்நோக்கி இத்தொகையினை பெற்று வழங்கிட நகராட்சி நிர்வாக இயக்குநர் அனுமதிக்கப்படுகிறார். பட்டியல்கள் இது இனங்களில் சரியாக இருக்கும்பட்சத்தில் பட்டியலை அனுமதிக்கும்படி சம்பந்தப்பட்ட சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர் / கருவூலக அலுவலர் அறிவுறுத்தப்படுகிறார். இந்தத் தொகையினை திருத்திய மதிப்பீடு / இறுதி திருத்திய நிதியொதுக்கத்தில் 2010–2011–ல் சேர்க்க உரிய கருத்துருவினை நிதித்துறைக்கு அனுப்புமபடி நகராட்சி நிர்வாக இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

8. இவ்வாணை நிதித்துறையின் 22–09–2010 நாளிட்ட அ.சா.எண். 176/ DS(B) /2010–ல் பெறப்பட்ட ஒப்புதலுடன் வெளியிடப்படுகிறது. இதற்கான கூடுதல் நிதியொதுக்கப் பேரேடு எண்.984 (தொள்ளாயிரத்து எண்பத்தி நான்கு).

//ஆளுநரின் ஆணைப்படி//

க. அசோக் வர்தன் ஷெட்டி,
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்
நகராட்சி நிர்வாக இயக்குநர், சேப்பாக்கம், சென்னை–5.
முதன்மைச் செயலாளர், நிதித்துறை, சென்னை–9.
மாவட்ட ஆட்சியர், தஞ்சாவூர் மாவட்டம்.
உள்ளாட்சி நிதி தணிக்கைத் துறை இயக்குநர், சென்னை–108.
மண்டல நகராட்சி நிர்வாக இயக்குநர், தஞ்சாவூர்.
ஆணையாளர், தஞ்சாவூர் நகராட்சி, தஞ்சாவூர்.
சம்பந்தப்பட்ட சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர் / கருவூலக அலுவலர்.

நகல்:
மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் செயலர், சென்னை–9.
மாண்புமிகு துணை முதலமைச்சரின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை– 9.
மாண்புமிகு நிதி அமைச்சரின் நேர்முக உதவியாளர், சென்னை– 9.
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை முதன்மைச் செயலாளரின் தனிச் செயலர், சென்னை–9.
நிதித் துறை (நநி(ம) கு.வ) / (வ.செ.பொது.1) / (வ.செ.பொது.2) சென்னை–9
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (அந2) துறை, சென்னை–9.
இ.கோ/ உதிரி நகல்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர் 21.09.2010